ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்திரிகை.

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்ரிகை



Vol. 11 | April, 1948 | No. 4

ஆசிரியர்: V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

வருஷச்சந்தா ரூ. 3—0—0

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்திரிகா

தொகுதி 11]　　ஏப்ரல், 1948　　[பகுதி 4

| | |
|---|---|
| ஆஸவாரிஷ்டங்கள் | 95 |
| பிரதம மந்திரிக்கு விஞ்ஞாபனம் | 96 |
| காரியதரிசியின் அறிக்கை. | 100 |
| த்ரிதோஷ ஸித்தாந்தம் | 101 |
| வரவேற்புக் கமிட்டியாரின் வேண்டுகோள் | 108 |
| 15-வது ஆயுர்வேத மஹா ஸம்மேளனம் | 111 |
| ஆமவாதம் | 112 |
| அபினி | 117 |
| சிரரோகத்தின் விளக்கம் | 122 |

## பூர்ண சந்த்ரோதய மகரத்வஜம்

ஓர் மஹத்தான பிரஸித்த ரஸாயனம்.

ஹ்ருதயத்திற்கும் நாடிகளுக்கும் க்ஷணத்தில்
பலமளிக்க வல்லது.

அநேக வித நோய்களில் அனுபான விசேஷங்களால்
உபயோகமுள்ளது
இது வைத்யர்கள் யாவருமறிந்ததே
ஆனால்
மருந்தின் சக்தி உயர்வு
செய்முறைத் தேர்ச்சியையும் பரிசுத்தியையும் பொருத்ததே
எமது பூர்ண சந்த்ரோதய மகரத்வஜம்
சிறந்த சாஸ்த்ரீய முறையில் ஸ்வர்ணம் முழுவதும்
சேரும் வகையில் தயாரிக்கப் பெற்றுள்ளது.

2 Grs. மாத்திரை 12-க்கு 5-0-0 | 2 Grs. 40-க்கு 14-0-0
,, 20 7-8-0 | ,, 100 32-0-0

தந்தி:
"ATREYA"

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.

# ஆஸவாரிஷ்டங்கள்.

நமது மாகாணத்தில் வைத்தியர்களால் செய்து சிகித்ஸை யில் உபயோகிக்கப்படும் ஆஸவாரிஷ்டங்களையும் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் சேர்த்துவிட்டதால் வைத்தியர்களுக்கும், நோயாளிகளான பொது ஜனங்களுக்கும் எண்ணற்ற இடஞ்சல்கள் அநுதினமும் ஏற்படுகின்றன வென்பதையும், இதற்கு எவ்வித பரிகாரம் செய்யவேண்டு மென்பதைப் பற்றியும், லைஸென்ஸ் முதலியன எவ்விதம் பெறவேண்டுமென்றும் பல வைத்திய நண்பர்கள் நமது கார்யாலயத்திற்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிருர்கள். ஆஸவாரிஷ்டங்களை மத்யவர்க்கத்தில் சேர்க்க சிறிதும் நியாய மில்லாவிடினும் சர்க்கார் ஏதோ பல பல காரணங்களினுல் ஆஸவாரிஷ்டங்களையும் மத்யவர்க்கத்தில் சேர்த்து கடினமான விதிகளையும் ஏற்படுத்தி விட்டனர். வைத்தியர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஸங்கசக்தி பலத்தினுல் சர்க்கார் ஆஸவாரிஷ்டங்களை மதுச்சட்டத்திலிருந்து முற்றிலும் விலக்கி விடும் வரை சர்க்காரிடம் பலவகையிலும் போராடவேண்டும். ஆனுல் ஆஸவாரிஷ்டங்களுக்கு சுதந்திரம் ஏற்படும் வரையில் மதுவிலக்குத் திட்டம் அமுலிலிருக்கும் பிரதேசங்களில் இருக்கும் ஸகல வைத்தியர்களும் ஆஸவாரிஷ்டங்களை ஸந்தானம் செய்யவும், சிகித்ஸையில் உபயோகிக்கவும் சர்க்காருக்கு அததற்கு வேண்டிய கட்டணத்தைக் கட்டி அநுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஆஸவாரிஷ்டங்களை ஸந்தானம் செய்யவோ, சிகித்ஸையில் உபயோகம் செய்யவோ கூடாதென்ற சட்டமிதுவரை ஏற்படவில்லை. எல்லாவற்றுக்கும் அநுமதி வேண்டும், கணக்கு வைத்துக் கொள்ளவேண்டு மென்பதே விதி. வைத்தியர்கள் வசிக்கும் தாலூகாவின் தாசில்தார் அல்லது ஜில்லா கலெக்டருக்கு ஆஸவாரிஷ்டங்கள் செய்யவும், உபயோகிக்கவும் அநுமதி தரும்படிக்கு முதலில் மனு செய்துகொள்ள வேண்டும். இதற்குள்ள கட்டணம் முதலிய எல்லா விவரங்களையும் தாசில்தார் கலெக்டர்கள் உடனே மனுதாரருக்கு அநுப்பி விடுவார்கள். அதன்படி கட்டணத்தைச் செலுத்தி அநுமதிபெற வேண்டியது. ஆஸவாரிஷ்டங்கள் போலவே, கஞ்சா, அபினி முதலிய வஸ்துக்களுக்கும் கலெக்டராபீஸிலிருந்து தான் அநுமதி பெறவேண்டும். வைத்தியர்கள் கச்சேரிக்கு நேரில் போக வேண்டு மென்பதில்லை. தபால் மூலமே அநுமதிக்கு எழுதினுல் போதுமானது.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் ஆஸவாரிஷ்டங்களை மதுவர்க்கத்திலிருந்து விலக்கிவிட வேண்டி சென்னை அரசாங்கத்

தினரிடம் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. பிரதமரிடம் நேரில் சமர்ப்பிக்கப் பட்ட விண்ணப்பத்தின் நகலை அடுத்துப் பிரசுரித்துள்ளோம். சாஸ்த்ரீய முறைப்படி ஸந்தானம் செய்துள்ள ஆஸவாரிஷ்டங்களைப் பற்றிய குணங்கள் சர்க்காருக்குத் தெரியாமையால் ஏற்பட்ட தீங்கை இந்த விண்ணப்பம் சர்க்காருக்குத் தெளிவாக்கியுள்ளது. சர்க்காருக்கு இன்னும் மனம் தெளியவில்லை. தேசீய வைத்தியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இது விஷயமாய் சர்க்காருடன் போராடியே ஆக வேண்டும். சமீபத்தில் கும்பகோணம் நகரில் நடைபெறும் ஆயுர்வேத மகாஸம்மேளனத்தில் எல்லா வைத்தியர்களும் ஒன்று கூடுங்கால் ஆலோசித்து வேண்டியதைச் செய்யுங்கள்.

# தமிழ்நாடு ஆயுர்வேத மண்டலத்திலிருந்து பிரதம மந்திரிக்கு விக்ஞாபனம்.

## ஆஸவாரிஷ்டங்களும் மதுவிலக்கும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் ஸ்தாயிஸமிதியின் தீர்மானத்தை ஒட்டி உபதலைவர் ஸ்ரீ V. சுப்பிரமண்ய அய்யர், பொதுக்காரியதரிசி ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, அங்கத்தினர் ஸ்ரீ K. ராகவன் ஆகிய மூவரும் 3–1–48-ல் சென்னை பிரதமர் ஸ்ரீ O. P. ராமஸ்வாமி ரெட்டியாரை பேட்டி கண்டு கீழ்க்கண்ட விக்ஞாபனத்தை ஸமர்ப்பித்தார்கள் :—

கனம்பொருந்திய ஐயா,

ஆஸவங்களையும் அரிஷ்டங்களையும் (ஆயுர்வேத ஔடதங்கள்) தடுக்கப்பட்ட குடி வகையராவில் சேர்த்ததின் விளைவாக இந்திய வைத்தியர்கள் எவ்வளவு இன்னல்களை ஏற்கவேண்டி இருக்கிறது என்கிற விஷயத்தை உங்களுடைய கவனத்திற்கு நாங்கள், (தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் உபதலைவர், பொதுக்காரியதரிசி, அங்கத்தினர்) பணிவுடன் கொண்டு வருகிறோம். இதனால்

ஆயுர்வேத வைத்தியர்கள் மட்டும்தானா பாதைப் படுகிறார்கள்? இவைகளினால் நல்ல பலன்களை அடையக் கூடிய பொது ஜனங்களில் எவ்வளவு பேர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது? போதையைத் தரும் மற்றைய ஔடதங்கள், மத்யங்கள், பானங்கள் முதலியவைகளின் கூட்டத்தில் ஆஸவாரிஷ்டங்களைச் சேர்ப்பதற்கு முன் இவைகளைத் தயாரிக்கும் முறைகளைப் பற்றிய சாஸ்திரீய விஷயங்களைப் பற்றி நன்கு அறியாதிருந்துவிட்டதே காரணமாகும். நாட்டு சாராயம் முதலியவைகளை புளிக்க வைப்பதுபோலவே இந்த ஔடதங்களையும் புளிக்க வைக்கிறார்கள் என்ற காரணம் ஒன்றைக் கொண்டே இவைகளையும் அத்தொகுதியில் சேர்த்துவிட்டார்கள் என்று எண்ணுகிறோம்.

ஆஸவங்களையும் அரிஷ்டங்களையும் தடுக்கப்பட்ட குடி வகையறுக்களில் இருந்து நீக்கவேண்டும் என்று கோர எங்களுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளைத் தொகுக்கிறோம் :

1. மது விலக்குச் சட்டத்தின் உத்தேசத்திற்கும் அமுலுக்கும் இந்த ஔடதங்களைத் தடுப்பது முற்றிலும் புறம்பானது. இவ்வாறு இவைகளைப் பாவிப்பது முறையும் இல்லை அவசியமும் இல்லை.

2. தடுப்பதால் கெடுதலே ஏற்படாது என்று சொல்லக்கூடிய நிலையிலும் கூட பிரசித்தமான குணம் மிக்குள்ள ஔடத தயாரிப்புக்களை மனம் போனபடி போதை தருபவைகள் என்று கூறி, தடுப்பது விஞ்ஞான வழியும் இல்லை. தவறும் கூட.

3. பொது ஜனங்களுக்கு மிக்க முக்கியமான ஆரோக்யத்திற்கு தீங்கில்லாத முறையில் அமுலுக்கு வரக்கூடாத லைசென்ஸ் முறையை யதேச்சையாக பொது ஜனங்களின் மீது திணிப்பது விவேகமும் இல்லை. நீதியற்றதும் ஆகும்.

4. வெளிநாட்டு ஔடத பானங்கள் (உதா. எலிக்ஸிர் ஜ்யோகடைன், பீடாலின் முதலியவைகள்) 17% to 20% ஆல்கஹால் கலந்திருப்பவைகளை விட்டு விட்டு மிக்க குறைவான ஆல்கஹாலை யுடைய ஆஸவாரிஷ்டங்களைத் தடுத்து

மிக்க பாரபக்ஷமுள்ள, வேண்டும் என்று செய்கிற காரியம் என்றே காணப்படும்.

5. ஏழைகளுக்கு சமூக நிலையிலும் பொருளாதாரத் துறையிலும் இன்னம் பலவகைகளிலும் நன்மை பயக்கக் கூடிய சட்டங்களை செய்ய முயலுகையிலேயே பல நூற்றாண்டுகளாக மிக்க மேன்மையான குணங்களையும் ஆச்சரியமான சக்திகளையும் பெற்றுள்ள ஔடதங்களை உபயோகித்து அவர்கள் அடைந்த நன்மைக்கு இடைஞ்சல் விளைவிக்கும் தீமையைச் செய்கிறதிலும் துரைத்தனம் ஈடுபடுவது பாபம் என்பது எங்கள் தீர்மானம்.

மேலும் சுருக்கமாக எங்களுடைய காரணங்களை தொகுக்க அனுமதியுங்கள்.

(அ) ஆஸவாரிஷ்டங்கள் மற்றய சாராயம், கள் வகையறுக்களைப் போல் போதை கொடுப்பவைகளோ கெட்ட பழக்கத்தை ஏற்படுத்துபவைகளோ அல்ல.

(ஆ) மற்றய மதுவர்க்கங்களின் கெட்ட குணங்கள் ஆஸவாரிஷ்டங்களுக்கு இல்லை. ஆகவே மதுவிலக்கு ஜாப்தாவில் தடுக்கப்பட வேண்டியவைகள் இல்லை.

(இ) வெகு காலமாக குணத்திற்கு பெயர்போன மருந்துகள் இவைகள். ஆகவே இவைகளைத் தடுப்பதால் ஜனங்களுக்கு இவைகளின் நல்ல பலன்கள் கிட்டாமல் செய்வதேயாகும்.

(ஈ) ஆஸவாரிஷ்டங்களை வைத்தியர்கள் குறிப்பின் பேரில் தான் மருந்தாக உபயோகிக்கிறார்கள். குடி என்ற எண்ணத்துடன் கள் முதலியவைகளை இறக்குவது போல் ஒருவரும் இவைகளை தயாரிப்பது இல்லை. மேலும் புருஷனோ, ஸ்திரீயோ கள் வகைகளைப் போல் போதையைப் பெறுவதற்காக இவைகளை உபயோகிப்பதும் இல்லை.

(உ) பெரும் அளவில் குடித்தால் கூட நரம்புகளுக்கு ஆஸவாரிஷ்டங்கள் கோளாறுகளைக் கொடுப்பதில்லை. மேலும் குடியினால் வரும் பல கேடுகளைப் (வியாதிகளை) போக்கவும் இவைகள் ஔடதங்களாக உபயோகிக்கப்படு

கின்றன என்பதை கனம் பிரதமர் அறியவேண்டும் என்று சமர்ப்பிக்கிறோம்.

(ஊ) ஆஸவாரிஷ்டங்களில் கலந்திருக்கும் ஆல்கஹால் பூராவும் மருந்துகளும் சம்சர்க்கத்தால் அவைகளிலேயே தோன்றியதே ஒழிய வெளியிலிருந்து கூட்டியது இல்லை. மேலும் போதைக்குக் காரணமான மிதைல், இதைல் வர்க்கத்தைச் சேர்ந்த ஆல்கஹால் இதில் இல்லை. ரஸாயன ஆராய்ச்சியினால் வேறுவிதமாக தீர்மானம் ஆனாலும் இதுவே எங்கள் அநுபவம். மேலும் இந்த ஆல்கஹாலின் அளவையும் ஒரே சீராக ஒரு ஆஸவத்தில் குறிப்பிட முடியாது. நேரத்திற்கு நேரம் இவை மாறக்கூடிய தன்மையுள்ளது. ஒரே மனிதன் ஒரே மாதிரி மருந்தை தயாரித்தாலுமே இவ்வித வித்தியாசமான அளவுகள் வரும். ஒழுங்குபடுத்த முடியுமா?

(ஐ) சமீபகாலத்தில் தான் ஆஸவாரிஷ்டங்களை பெருவாரியாக வியாபார நிமித்தம் தயார் செய்து ஜனங்களுக்கு நேரிட விநியோகிக்க முயன்றன. சில கம்பெனிகள். இவைகள் தொகையும் மிகச் சிறிதே. அனேக ஆயுர்வேத வைத்தியர்கள் வியாபாரிகளிடம் மருந்துகள் வாங்குவதில்லை. தாங்களே தான் தயார் செய்துகொள்ளுகிறார்கள். ஆகவே ஆஸவாரிஷ்டங்கள் மிக்க குறைந்த அளவிலேயே தயாரிக்கப் படுகின்றன. இந்நிலையில் இந்த வைத்தியர்களுக்கு ஆஸவாரிஷ்டங்கள் தயார் செய்வதற்காக லைசன்ஸ் கட்டணம் ஏற்படுத்தினால் தொகை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் தொழிலில் இடைஞ்சல்களைக் கொடுப்பதும் சுமையை அதிகப்படுத்துவதாகவுமே ஏற்படும்.

(ஒ) அப்படியே தயாரிப்பவர்களுக்கு லைசன்ஸ் விதித்துவிட்டு இந்த ஆஸவாரிஷ்டங்களை உபயோகிக்கும் ஒவ்வொரு நபரையும் கூட (வைத்தியர் அனுமதியின் பேரில் உபயோகிக்கிறவர்கள்) லைசன்ஸ் பெறும்படி துரைத்தனம் சொல்லப் போகிறதா?

மேற்கண்ட விஷயங்களை தாங்கள் கூர்ந்து கவனித்து தக்கவாறு மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்தித் தருவீர்கள்

என்று நம்புகிறோம். அவ்விதம் செய்தால் ஆயிரக்கணக்கான ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் அவர்களை யண்டி உதவி பெறும் லக்ஷோபலக்ஷம் வியாதியஸ்தர்களும் ஒரு பெரும் உபகாரத்தைப் பெறுவார்கள். நம்முடைய ஜன நாயக சர்க்காரிடம் நன்கு காப்பாற்றப் படுகிறது என்று தேறி ஸ்வதந்திரமாக மூச்சு விடுவார்கள்.

உங்களுக்கு வணக்கமுள்ள,
(Sd.) வி. சுப்பிரமணிய அய்யர்,
உபதலைவர்.
த. வீ. இராதாகிருஷ்ணன்,
பொதுக்காரியதரிசி.
கே. ராகவன்,
ஸ்தாயி ஸமிதி அங்கத்தினர்.

சென்னை,
3—1—48

N. B.— மதுவிலக்கு மந்திரிக்கு காப்பி அனுப்பப் பட்டது.

# காரியதரிசியின் அறிக்கை.

**தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் 15 வது சம்மேளனம் 1948 மேமீ முதல் வாரத்தில் அநேகமாய் 1, 2 தேதிகளில் கும்பகோணத்தில் நடைபெறும்.**

இந்திய வைத்தியர்கள் அனைவரும் அவசியம் ஒன்றுகூடி பிரசாரத்தில் இறங்கவேண்டும். சில நவீன வைத்தியர்கள் நம்மை அழித்துவிட நம்மிடையுள்ள கக்ஷி வித்தியாசங்களே காரணங்களாகி விடுகின்றன. சித்த ஆயுர்வேத யுனனி என்ற வித்தியாசங்களை தனிக்கூட்டங்களில் சர்ச்சை செய்து கொள்ளலாம். சம்மேளனங்களில் திரண்டு வந்து நம் பலத்தைப் பெருக்கிக் கொள்ளுவோம். வைத்தியர்கள் அனைவரும் தவறாது இந்த சம்மேளனத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மகாநாட்டில் ஆலோசிக்கப்பட வேண்டிய தீர்மானங்களை தெளிவாய் எழுதி எனது விலாசத்திற்கு ஏப்ரல் 20 தேதிக்குள் வரும்படி அனுப்பிவிட வேண்டும்.

சம்மேளனத்திற்குத் தலைமை வகிக்க அதிக ஓட்டுக்களால் ஸ்ரீ V. B நடராஜ சாஸ்திரிகள், ஆயுர்வேதாசார்ய அவர்கள் தேர்ந்

தெடுக்கப்பட்டு அவரும் இசைந்துள்ளார். பல வருடங்களாக நமது மண்டலத்திற்கு இடையருது பணியாற்றும் அவர் தலைமை யில் நம் பல காரியங்களை சாதித்துக் கொள்ளவேண்டும். அவருக்கு உத்ஸாகத்தை யளிக்க சகல வைத்தியர்களும் மண்டலத்து அங்கத்தினர்களாக பதிவு செய்துகொண்டு சம்மேளனத்திற்கும் வரவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

தக்க வைத்திய விஷயங்களைப் பற்றி பேசவோ, வியாசம் வாசிக்கவோ விரும்புகிறவர்களும் ஏப்ரல் 20 தேதிக்குள் எனக்கு தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆயுர்வேத பரிசீலனைக்காக மத்திய சர்க்காரால் நிறுவப்பட்ட சோப்ரா கமிட்டி சென்னையில் மார்ச்சு 26 தேதி முதல் 29 தேதி முடிய தங்கி விசாரணைகள் செய்தபொழுது நமது மண்டலத்தின் சார்பில் ஒரு விசேஷ யாதாஸ்து ஸமர்ப்பிக்கப் பட்டு நேரிலும் விஷயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டது.

ஸம்மேளனத்தைப் பற்றிய விவரங்களுக்கு வரவேற்புக் கார்யதர்சியின் அறிக்கையையும் கவனிக்கவும்.

த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
பொதுக் கார்யதர்சி.
23. சிங்காரி நாயக்கன் தெரு,
மைலாப்பூர், சென்னை.

# த்ரிதோஷ ஸித்தாந்தம்*

[ வைத்யரத்னம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய, எழுதியது. ]

த்ரிதோஷம் என்று பொதுப் பெயரால் வழங்கப்படும் வாத பித்த கபங்களைப் பற்றிய பரிசீலனை ஆயுர்வேதமறிந்தவர்களுக்கு ஒரு புதிய விஷயமல்ல. ஆயுர்வேத நூல்களில் மூன்று தோஷங்களும் ஆரோக்கிய நிலைமையில் உடலின் (உட்புற வெளிப்புற அவயவங்களின்) இயற்கை குணங்

*இவ்விஷயம் Scientific Memoranda Sub-Committee க்கு நான் எழுதிக் கொடுத்த இரண்டாவது சாஸ்த்ரீய விஷயத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

கள் இயக்கங்கள் இவற்றைப் பற்றியும், ஆரோக்கியம் தவறிய (வியாதி) நிலைமையில் தாதுக்களின் கோளாறு களைப் (வைஷம்யங்களைப்) பற்றியும் அறிவதற்கு இன்றி யமையாச் சாதனமாய் அமைந்துள்ள த்ரிதோஷ தத்துவம் என்பது நெடு நாட்களுக்கு முன்பே சாஸ்திர வல்லோரால் தீர்மா னிக்கப்பட்ட உண்மை. விஷய தத்துவம் அறிந்தவர் களால், முக்கால நிலைமை யுணர்ந்த முனிவர்களால் முன்ன மே சாஸ்திர விசாரங்களாலும், அடிக்கடி அனுபவங்களா லும் நிர்ணயிக்கப்பட்ட விஷயதத்துவங்களைப் பற்றி இன் னும் அடிக்கடியும் ஆலோசித்து முடிவு செய்யக் கருதி முயற்சி செய்வதே அநாவச்யமான வேலை யென்பது என் அபிப்பிராயம். த்ரிதோஷங்களைப் பற்றி விவரிப்பதற்கு முன் நமது பொது நிலைமையைச் சிறிது ஆராய்வோம்.

நவீன முறை எனப்படும் மேனாட்டு வைத்திய முறை இந்நாட்டில் எப்பொழுது அடிவைக்க ஆரம்பித்ததோ, அதிலும் முக்கியமாக எப்பொழுது ஸூக்ஷ்மதர்சந யந்திரம் நிர்மிக்கப்பட்டு நாடுகளில் பிரசாரத்திற்கு வந்ததோ, மேனாட்டு அதிகாரிகளின் அபிப்பிராயங்களுக்கு அனுகூல மாய் நம் நாட்டுப் பணம் அபரிமிதமாகச் செலவிடப்பட்டு மேனாட்டு வைத்திய முறைப்படி நூற்றுக் கணக்கான ஆஸ்பத்திரிகள் என்கிற வைத்தியசாலைகள் எப்பொழுது நாடெங்கும் நிலை நாட்டப் பட்டனவோ, அது முதல் மேனாட்டு வாழ்க்கை முறையில் மனதைச் செலுத்திய— மேற் பூச்சளவில் நிற்கும் நாகரிக மேம்பாடென்கிற ஆடம் பர நடக்கையில் ஈடுபட்ட பலர், பராவரதத்துவ முணர்ந்த பண்டைக்காலத்திய பேரறிஞர்கள் வெளியிட்டுள்ள வைத் திய சாஸ்திரத்தில் சிறுகச் சிறுக அநாதரவையும், அவநம் பிக்கையையும் காட்டத் தலைப்பட்டனர். மேனாட்டு வைத் திய முறையைப் பயின்று அம்முறைப்படி தொழில் நடத் தும் நமது ஸகோதரர்களிலும் பெரும்பான்மையோரும் ஆயுர்வேத சாஸ்திரத்தைக் கற்காமலே அதில் அடிக்கடி யும் குற்றங் குறைகளைக் காட்டி, அதன் அபிவ்ருத்திக்குப் பெரிதும் இடையூறு செய்யலாயினர். ஆகவே தான், என் போன்றவர் எவ்வளவு முயன்றாலும், எத்தனை கார

ணவாதங்களைச் செய்தாலும், ஆயுர்வேதத்தின் உண்மை யுபயோகத்தை ஆய்ந்தோய்ந்து பார்க்கக் கமிட்டிகள் நிய மித்து விசாரணை செய்ய முயன்று அதிகாரிகள் வீண் செல வும், அநாவசியகமான கால விரயமும் செய்து வருகிறார் கள்.

சாஸ்த்ரீயக் கொள்கைகள் அடங்கிய ஆயுர்வேத முறை இந்நாட்டில் தாழ்த்தப்பட்டிருப்பதைப் பற்றிய விஷயம் இருக்கட்டும். மேனாடுகளிலும் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு (பதினாறு பதினேழாம் நூற் றாண்டுகளிலும் அதற்கு முன்பும்) வைத்தியத் தொழில் உண்மையில் உயர்தர வாழ்க்கையில் ஈடுபட்டவர்களால் இழி தொழிலாகவே பாவிக்கப்பட்டு வந்தது. அக்காலத் திலும் அதற்கு முன்புங்கூட இப் பரத நாட்டிலேதான் வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான ஆராய்ச்சியும் பிரசார மும் மேம்பாடடைந்து வந்ததோடு, அத்தொழிலில் ஈடு பட்டவர்களை அசோகர் முதலிய அரசர்களும், ஹியொன் த்ஸாங் முதலிய சீன யாத்ரிகரைப் போன்ற அறிவாளி களும் மிகவும் பாராட்டி, அவர்களுடைய தொழில் முறை யை நாட்டினரின் நன்மைக்கும் பயன் படுத்தலாயினர்.

சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளாக இராசாங்கச் செலவென்கிற பெயரில் ஜனங்களுடைய பொதுப் பணச் செலவில் மேனாட்டு வைத்திய முறை மேனாட்டு அதிகாரி களின் ஆதரவால் அபிவ்ருத்தியடைந்து வந்தது. ஆகவே அவ்வைத்திய முறை அவசியமான அங்கங்களையும் பிரத் யங்கங்களையும் பெற்று ஓங்கி வளர முடிந்த தென்பதில் வியப்பொன்றுமில்லை. அச்சாஸ்திரம், சரீரதத்துவம், பிர ஸவ சாஸ்த்ரம், ரோக விஞ்ஞாநம், ஔஷத சாஸ்திரம் முதலியவற்றால் நிரம்பி யிருக்கிற தென்றும், ஆகவே அது ஸர்வாங்க ஸம்பூர்ணமான தென்றும் அம்முறையில் பக்ஷ பாதமுள்ளவர்கள் தம் கொள்கைக்கு ஆதாரமும் பலமும் கூறுகிறார்கள். ஆயுர்வேதத்திற்கு அவ்வித அங்கங்களும் உபாங்கங்களும் கிடையாதென்று, நமது பக்கத்திற்கு அவர்கள் இஷ்டப்படி பலக்குறைவை அன்னார் எடுத்துக் காட்டுகிறார்கள்.

உண்மையைப் படித்தறியாமலேயோ, அல்லது உண்மையை மறைக்கத் துணிந்தோ அவர்கள் அவ்விதம் கூறுகிருர்கள் என்கிறோம் நாம். அங்கஹீனமான நிலைமை ஹோமியோபத் என்கிற வேறு வைத்திய முறைகளுக்கு உண்டென்று கூறினுல் அதை மறுக்க முடியாது; ஏனெனில் அவற்றில் ஔஷத முறையில் ஏதோ ஒருவகை வேறுபாடு கூறப்படுகிறதே யன்றி, வியாதி நிதானம் முதலிய மற்ற அங்கோபாங்கங்களில் மேனுட்டு முறையிலும் மாறுபாடு ஏதும் காணக் கிடைக்காது. ஆயுர்வேதமோ அதற்கென்றுள்ள எல்லாவித அங்கோபாங்கங்களைப் பெற்று, தனியான வைத்திய முறையாய் விளங்குகிறது. வெளிப்புற உட்புற அவயவங்களைப் பற்றிய சாரீர சாஸ்திரம் அதற்கென்று அமைந்துள்ளது. சாரீர க்ரியா ஸம்பந்தமான தத்துவத்தைக் கூறும் பாகமே ஆயுர்வேதத்தில் **த்ரிதாது ஸித்தாந்தம்** என்று வழங்கப் படுகிறது. ரோக விஞ்ஞானத்திற்காக நிதானம் என்கிற பெரும் பகுதியும் உளது; இப்பகுதியில் தான் பிரக்ருதி நிலைமையிலிருந்து மாறுபட்டு விக்ருதி நிலைமைகளைப் பெற்ற வாத பித்த கபங்களை **த்ரிதோஷம்** எனக் கூறுகிறோம். ஆரோக்கிய நிலைமையில் உடலை தாரணம் செய்ய உபயோகமா யிருப்பதால் **த்ரிதாதுக்கள்** என்றும், சரீரம் நோயுற்றிருக்கையில் இவையும் கோளாறடைந்திருப்பதால் **தோஷங்கள்** என்றும் நிலைமைக்கும் குணுகுணங்களுக்கும் ஏற்றவாறு அவற்றைப் பெயர்களால் மாற்றி வழங்குகிறோம். பேஷஜ சாஸ்திரம் என்கிற ஔஷத முறை வகுப்பும், திரவ்யகுண வகுப்பும் ஆயுர்வேதத்தில் வெகு விஸ்தாரமானது. இவற்றை யன்றி பிரஸூதி தந்திரம் என்கிற பிரஸவ சாஸ்திரமும், அகத தந்திரம் என்கிற விஷ சாஸ்திரமும், குழந்தைகளைப் பரிபாலிக்கும் முறையைப் பிரத்தியேகமாக விளக்கும் கௌமார ப்ருத்யமும், ஆரோக்கிய நிலைமையைக் காக்கும் ஸ்வஸ்த்த வ்ருத்த முறையும், சஸ்திர சாலாக்ய தந்திர வகுப்புகளும் ஆயுர்வேதத்திற்குத் தனியே உண்டு. இரஸ தந்திரம் முதலிய வேறு பல அம்சங்களும் குறிப்பிடக் கூடியவையே. ஆயுர்வேதம் அங்கஹீனமான சாஸ்திரம் என்கிற ஒரு பிழைப்பட்ட அபிப்பிராயத்துடன் கேள்விகள் பிறந்

திருப்பதால், அதற்குச் சமாதானம் கூறும் வகையில் இவ் விஷயங்களை விளக்க வேண்டி நேரிட்டது. இப்பொழுது தத்வித்ய பரிஷத்தால் கேட்கப்பட்டுள்ள த்ரிதோஷ ஸித்தாந்தத்தைப் பற்றிய பிரச்னைக்கு நேரடியாகச் சுருங்க விடையளிக்கிறேன்.

ஆயுர்வேதம் ஏற்பட்ட ஆதிகாலந் தொட்டு இன்றளவும் த்ரிதோஷ ஸித்தாந்தக் கொள்கை சாஸ்திரப்படியும் அனுபவப்படியும் இடைவிடாது வைத்தியர்களுடைய தொழில் முறையில் வழக்கத்தில் இருந்து வருவதோடு கற்றறிந்த வைத்தியர்கள் இவ்வுண்மையை உணர்ந்தும் இருக்கிறார்கள். மேனாட்டாருடைய இக்காலத்திய விஞ்ஞான முறைகளை அனுஸரித்து வைத்திய விஷயத்தில் புதிய உண்மைகளை பல தெரிந்துகொள்ளப் பட்டிருப்பதாகவும், முன்பு உண்மை யென்றுணர்ந்திருந்த விஷயங்களிற் பல மாற்றப்பட வேண்டியதாய் விட்டதென்றும், வேறு சில தத்துவாம்சங்கள் பல வேறு பரிசோதனைகளால் முற்றிலும் தள்ளப்பட்டுப் போயின வென்றும் கூறியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்களுடைய சாஸ்த்ர ஸம்பந்தமான கொள்கைகளிலும் ஸித்தாந்தங்களிலும் அடிக்கடியும் நிலையற்ற நிலைமையைக் கேட்டும் பார்த்தும் வருகிறோம். ஆயுர்வேத ஸம்பந்தமான த்ரிதோஷ ஸித்தாந்தம் போன்ற உண்மைகள் மேனாட்டு நாகரிகத்தில் மயங்கிய இக்காலத்திய விஞ்ஞானிகளில் சிலரால் விஷயங்களைப் படித்தறியாமலே வீண் ஆக்ஷேபங்களால் தாக்கப்பட்ட போதிலும், அரசாங்கத்தாரால் மாற்றாந்தாய் மகனைப் போல் பாவிக்கப்பட்டுவந்த போதிலும், ஆதிகாலத்திலிருந்து இன்றளவும் தன் உண்மை நிலைமையில் மாறுபாடு ஏதும் பெறாமல் பாரமார்த்திக வைத்திய சாஸ்திரஞ்ஞர்களின் மூலமாய்த் தம் குணங்களையும் உபயோகங்களையும் நிஷ்பக்ஷபாதிகளுக்கு நிரூபித்து வருகின்றன. இனி வருங்காலத்திலும் த்ரிதோஷ ஸித்தாந்தம் சாஸ்திர உண்மை நிரம்பியதென்பதையும் என்றைக்கும் மாறுபடாத் தன்மையதென்பதையும் விவேகிகள் உணர நேரிடும்.

பஞ்சபூத மயமாய், பஞ்சேந்த்ரியங்களடங்கியதாய் உருவெடுத்துள்ள நமது உடல் முற்றிலும் உணர்ச்சி

பொருந்திய வஸ்து; அதாவது ஸேந்த்ரியத் திரவ்யங்களாலான சைதந்யம் நிரம்பிய ஜீவ வஸ்து. சைதந்யம் நிரம்பிய இத்தேஹம் ஏழு தாதுக்களால் நிர்மிக்கப்பட்டது; விஸர்க்கங்கள் என்கிற (excreta) மலங்கள் உற்பவிக்குமிடம்; இது வெவ்வேறு வகை சக்திகள் எனக் கூடிய வாத பித்த கபங்கள் என்கிற மூன்று மஹா தாதுக்களால் உயிர் வாழுங்காலமெல்லாம் தாங்கப்படுகிறது. இவற்றுள் ஜீவதாதுவுக்கு ஆதாரமானது வாயு, தாத்வக்னியை ஆண்டாள்வது பித்தம், ஸௌம்ய குணத்தின் சக்தியினால் உடலை ஸ்நிக்தமாக்கிப் போஷிக்கும் திறனுள்ளது கபம். இவ்வாறு ஸூக்ஷ்ம பதார்த்தங்களுக்குள்ள நுட்பமான சக்தி விசேஷங்களை அனுசரித்து ஒவ்வொரு தோஷத்திற்கும் அததற்கென்றுரிய விசேஷ குணங்களும் கர்மங்களும் ஆயுர்வேதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தோஷங்களுக்குள் இவ்விசேஷார்த்தங்கள் "வாதத் தன்மையையே பெற்றிருப்பது ஆத்மா, அக்னித் தன்மையைப் பெற்றிருப்பது பித்தம், குளிர்ச்சியையும் வழவழப்பையும் பெற்று தாதுக்களைத் தணிக்குந் தன்மையது சிலேஷ்மம்" என்கிற ஸுச்ருத வசனத்தில் அடங்கியுள்ளன.* தாது த்ரயம் (மூன்று தோஷங்கள்), தாது ஸப்தகம் (ரஸாதி ஏழு தாதுக்கள்) ஆகிய இவ்விரண்டுக்கும் முறையே ஈசேசித வ்யரூபமான (த்ரிதாதுக்கள் ஆளுபவை, ஸப்த தாதுக்கள் ஆளப்படுபவை) என்கிற ஸம்பந்தம் நமது ஜீவிதகாலமெல்லாம் தொடர்ந்து நடந்தேறுகிறது.

சரீரத்தில் உள்ளும் புறமுமுள்ள அவயவங்கள் அனைத்தும் வெவ்வேறு அளவில் ஒன்று சேர்க்கப்பட்ட ஏழு தாதுக்களால் ஆனது. அவற்றைப் பக்குவமான நிலைமையில் வைக்கவும், பக்குவப் படுத்திப் பரிணமிக்கச் செய்யவும் பித்த தாதுவும், அவற்றைக் களிப்பித்துப் போஷிக்கச் செய்ய கப தாதுவும் இடைவிடாது இயற்கையிலேயே இயங்கி வருகின்றன. ஜீவசக்தியை நிர்வஹிப்பதிலும், சேதநா தாது வென்கிற உணர்ச்சி வேகத்தை நிறுவச்

---

* तत्र वायुरात्मैवात्मा, पित्तमाग्नेयम्, श्लेष्मा सौम्यः । सुश्रु. सू. अ. 42.

செய்வதிலும் வாதம் எப்பொழுதும் முயன்று வருகிறது. ஸகல தாதுக்களையும், பொதுவாக ஸாங்கோபாங்கமான உடலனைத்தையும், பித்த கபங்களையுங் கூட கட்டியாளும் அஸாதாரண சக்தி பொருந்தியது வாதம். பிராணி சரீரங்களைத் தொகுத்து அமைக்கும் பல வேறு வகையான ஸேந்த்ரிய (உயிரும் உணர்ச்சியுமுள்ள) பதார்த்தங்களை இங்ஙனம் ஏழுவித தாது ரூபங்களாகப் பகுத்து விவரித்திருக்கும் ஆயுர்வேத சாரீர முறையானது, இக்காலத்திய மேனாட்டு முறை ஸம்பந்தமான ஹிஸ்டாலஜீ (Histology) என்னும் வர்கீகரண முறையினும் அதிக மேன்மையாகவும், வெகு தெளிவாகவும் இருப்பதாக மேனாட்டு வைத்தியம் பயின்ற இரண்டொரு நண்பர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். அவ்வேழு தாதுக்களையும் இடைவிடாது அடக்கியாண்டு இயக்கி வரும் சக்தி மூன்று தோஷங்களுக்கு அமைந்திருப்பதாக ஆயுர்வேதம் ஸித்தாந்தம் செய்திருக்கும் முறையும் முற்காலத்திய சாஸ்திரஞ்ஞரின் மதி மேன்மையை விளக்குவதாகவும் அன்னார் அபிப்பிராயப் படுகிறார்கள். மூன்று தோஷங்களுக்கும் ஆரோக்கிய நிலைமையிலும், பிணிகளால் வருந்துந் தருணங்களிலும் உள்ள குணகுணங்களை, ஆயுர்வேதமறிந்தவர் பல முறைப் படித்திருப்பாராகையால், இங்கு அவ்விஷயங்களைப் பற்றிய தகவல்களைக் கூறாது நிறுத்திக்கொள்கிறேன்.

வாத பித்த கபங்கள் மூன்றும் உடலின் உயிர்வாழ்க்கையை நிர்வஹிக்கும் சக்தி பொருந்தியவை; அகில தாதுக்களுடைய நிலையும், போஷணையும், குண கர்மங்களும் அவற்றைப் பற்றியனவாயிருக்கின்றன. த்ரிதோஷ தத்துவத்தைப் பற்றிய அறிவு நோயில்லா நிலைமையில் உட்புற வெளிப்புற சரீர தாதுக்களின் ஆரோக்கிய ஸம்பந்தமான குணங்களையும் இயக்கங்களையும் தெரிந்து கொள்வதற்கு மாத்திரமல்ல, ஆனால் தேஹம் நோய்வாய்ப்பட்டு வருந்துகையில் ரோக நிதான லக்ஷணாதிகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளவும் அதிக அனுகூலமானது. த்ரிதோஷங்களும் உடலைத் தாங்குவ முக்காலி (ஸ்த்தூணாத்ரயம்)

போல் அமைந்திருப்பதாகச் சாஸ்திரம் கூறுகிறது. அப்படியே வியாதியில் இம் மூன்று தோஷங்களும் த்ரிசூலம் போல் பரிணயித்து மனிதனை வருந்தச் செய்கின்றன. முக்காலமறிந்த நுண்ணறிவாளர்களான ஆத்ரேயாதி ஆதிகாலத்துச் சாஸ்திரஞ்ஞரால் என்றைக்கும் மாறுபடாத் தத்துவமென்று நிர்ணயித்து எழுதி வைத்துள்ள த்ரிதோஷ தத்துவம், ஆதிகாலத்திலே போலே இனி வரும் காலத்திலும் சிரஸ்த்தாயியாய் (என்றும் அழிவுபடாததாய்) இருக்கக்கூடியதென்று இக்காலத்திய விஞ்ஞான சாஸ்திரிகளாலும் அக மகிழ அங்கீகரிக்கும் காலம் வருமென்பது என் போன்றவரின் கொள்கை.

# 15-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம், கும்பகோணம்.

## வரவேற்புக் கமிட்டியாரின் வேண்டுகோள்.

இவ்வருஷத்திய ஸம்மேளனம் கும்பகோணத்தில் 1948 மே மாதம் முதல் வாரம் நடைபெறப் போகின்றது. நமது பாரத தேசம் பூர்ண ஸ்வதந்திரம் பெற்றபின் முதன் முதலாகக் கூடும் இச்சம்மேளனத்திற்கு விசேஷ முக்கியத்துவ மிருப்பது இயற்கையே. ஸ்வதந்திர இந்தியாவில் கக்ஷி பிரதிகக்ஷிகளுக்கும் வாத பிரதி வாதங்களுக்கும் இனிச் சிறிதும் இடமில்லை. நம் இந்திய வைத்தியமானது மீண்டும் தன் உயர்ஸ்தானத்தை அடையும்படி செய்வது ஒவ்வொரு இந்திய வைத்தியனின் முதற் கடமை.

அடிப்படைத் தத்துவங்களான, திரிதோஷம், பஞ்சபூதம், ஷட்ரஸம், ஸப்த தாது, வீர்யவிபாகங்கள் என்ற விஷயங்களில் லக்ஷ்ய புத்தியுடன் ஒற்றுமையான ஒரே அபிப்பிராயமுள்ள ஸகல வைத்தியர்களும் இந்திய வைத்தியர்களே. அவரவர்கள் பாஷை வித்தியாஸம், பரம்பரையாக வந்த அனுபவ வித்தியாஸம், சிற்சில விசேஷ முறைகள் கையாண்டு வருவதென்பது, விதேசிய வைத்திய முறையுடன் ஆயுர்வேதத்தையும் கலந்து பயின்று அப்யஸிப்பது, என்ற இந்த சிறு சிறு காரணங்களால் ஒருவருக்கொருவர் அன்னியர்களாகி விடமாட்டார்கள். ஆகவே

ஆயுர்வேத, ஸித்த வைத்தியர்கள் என்றும், சுத்தாயுர்வேதக்காரர்கள், மிச்ராயுர்வேதக்காரர்கள் எனவும் வீண் வித்யாஸம் பாராட்டாமல் ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்களை அனுஸரித்து வைத்தியம் பயிலுபவர்கள் என்ற ஒரே எண்ணத்துடன் ஒன்று சேர்ந்து கூட்டுப் பொறுப்புடன் மனப்பூர்வமாய் ஒத்துழைத்து நமது லக்ஷ்யத்தை அடையவேண்டிய தருணமிது. காலப்போக்கைக் கவனித்தால் இந்த கலாபிவிருத்தியில் ஜாதிமத பேதமின்றி தேசாபிமான முள்ள ஒவ்வொரு இந்தியனும் ஒன்று சேர்ந்து இயங்கவேண்டு மென்பது நன்கு புலப்படும்.

இந்திய சர்க்காரால் நமது வைத்தியத்தின் அபிவிருத்தியின் பொருட்டு ஆலோசனை சொல்வதற்காக நியமிக்கப்பட்ட சோப்ரு கமிட்டி, தனது ஆலோசனைகளைத் தெரிவிக்கு முன் பூர்வாங்கமாக நமது வைத்தியர்களைக் கலந்தாலோசிக்க— நமது வைத்தியத்தின் வருங்காலத் தலையெழுத்தை நிர்ணயிக்க— தற்போது நம் தேசமெங்கும் சுற்றி வருகிறது என்பது எல்லோரும் அறிந்ததே. இத்தருணம் நமது வைத்தியத்தின் வருங்காலத்திற்கு அடிகோலும் என்பதால் இத்தருணத்தை நழுவ விடுவதோ, சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பதோ, நாம் நம் சந்ததியாருக்கும், நமது நாட்டுக்கும் நமது வைத்தியத்திற்கும் இழைக்கும் பெருங் கொடுமையாகும். சோப்ரு கமிட்டியாருக்கு- விசேஷமாக ஆயுர்வேதத்தில் அபிமான மில்லாதவர்களுக்கு— நமது வைத்தியம் தான் பாரதத்திற்கு உகந்த உன்னதமான வைத்திய மென்பதை ருசுப்பிக்கவேண்டும். அதை நமது இந்திய வைத்தியமாக்க,— பிறகு ஸர்வதேச வைத்தியமாக்க— தகுந்த மார்க்கங்களையும் காட்டி சோப்ரு கமிட்டியாரை நமக்கு ஸாதகமாக இந்திய சர்க்காரிடம் ஆலோசனை சொல்லுமாறு தூண்டவேண்டும். அவர்களை அறிவுறுத்தும் பொழுது நாம் நமது சில்லரை வித்தியாஸங்களில் மனம் செலுத்தாமல் ஒன்றுபட்ட மனதுடன், நமது வைத்தியத்திற்கு அதன் தாய்நாட்டில் உற்ற— உயர்ந்த ஸ்தானமளிக்கப் படவேண்டும் என்ற ஒரே பிரார்த்தனையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

சோப்ரு கமிட்டியாருக்கு சிபார்சு செய்யத் தகுதியுற்ற ஸ்தாபனம் நம் ஆயுர்வேத மஹாமண்டலம் தான். இது நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டல ஸ்தாபனத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால், இதன் சிபார்சு அகில இந்திய மஹாமண்டலத்தினராலும் ஏற்கப்பட்டு தகுந்த பலமடையும்.

நமக்குள் ஆயுர்வேதம், ஸித்தம், யூனானி வைத்தியம் பயிலுபவர்கள் என்றோ, L. I. M.– L. I. M. அல்லாதார் என்றோ பிரிந்து

நின்றால் வெளியார் நம்மை எளிதில் அழித்து விடுவார்கள். அழிப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்களையும் நமது எதிரிகள் பூர்ணமாகச் செய்து வருகின்றார்கள். அற்ப விஷயங்களை வீணுகப் பாராட்டிப் பெரிது படுத்தி அடிப்படை விஷயங்களில் ஏமாந்து விடுவோமென்பதை நாம் நினைவிலிருத்த வேண்டும். இனி மாத்ஸர்யத்திற்கு இடமில்லை. நம் எல்லோரையும் தலை தூக்கவொட்டாமல் தடுத்துவரும் மேல்நாட்டு ஸம்பிரதாயங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள இதுதான் உற்ற தருணம்.

ஆகையால் நாம் எல்லோரும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் ஆயுர்வேதத்தின் வருங்காலத்தை உருப்படுத்துவோமாக. நமக்கு வரும் இன்னல்களை தீர்க்காலோசனையுடன் தடுக்க முயற்சி செய்து அதில் வெற்றி பெறுவோமாக.

கும்பகோணத்தில் பிரதிநிதிகள் தங்குவதற்கு போஜன வசதியுடன் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் நம் மூலிகைகளின் பிரபாவத்தையும் மருந்துகளின் அபூர்வமான செய்பாகங்களையும் பொதுஜனங்கள் அறிய ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களை திருப்தி செய்யக்கூடியதாய் மூலிகை மருந்து பொருட்காட்சியும் நடத்த விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. அத்துடன் சிறந்த வைத்தியர்கள் மூலம் ஆராய்ச்சியுடன் சிற்சில அரிய விஷயங்களைப்பற்றி உபன்னியாஸங்களும் நிகழப் போகின்றன. நமது அருந்தலைவர்களில் பலர் அச்சமயம் வந்து நமது ஸம்மேளனத்தைச் சிறப்புற நடத்த இசைந்துள்ளார்கள். ஆகையால் ஒவ்வொரு வைத்தியரும் தனது முயற்சியால் மற்றும் தனது பிராந்தியத்திலுள்ள எல்லா வைத்தியர்களையும் அழைத்து வந்து ஸம்மேளனத்தை சிறப்புற நடத்தி வருங்காலத்தில் நமது வைத்தியத்தையே ஸகல இந்திய வைத்தியமாக்கப் பாடுபடுவார்கள் எனக் கோருகின்றோம்.

ஸ்ரீராம மந்திரம்,
ரெட்டி ராயர் குளம்,
கீழ்கரை, கும்பகோணம்.
23 — 3 — 48.

தங்கள்,
V. R. லக்ஷ்மீகாந்த சர்மா,
கார்யதர்சி,
வரவேற்பு கமிட்டி, 15-வது
தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம்.

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்
# 15-வது வருஷத்திய ஸம்மேளனம்.

நாளது 1948 மே-மீ முதல் வாரத்தில் கும்பகோணத்தில் நமது ஸம்மேளனம் நடைபெறுகின்றது. தலைவர் தேர்தலில் நமது அங்கத்தினர்களால் அதிக ஓட்டுகள் அளிக்கப்பட்டுள்ள வைத்ய வாசஸ்பதி, வைத்ய விசாரத, ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ. V. B நடராஜ சாஸ்திரிகள் தலைமை வகிக்க இசைந்துள்ளார்கள். அன்னாரின் தலைமை இந்த தருணத்தில் மிகவும் பொருத்தமானது. தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் தன்னலமற்ற ஸேவகர்களில் அன்னார் முக்ய ஸ்தானம் பெறுவர். தற்சமயம் நமக்கு ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பில், நல்ல வழிகாட்டியாகி, எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று, நம் மஹாமண்டலத்தின் திட்டங்களை கிரியாம்சையில் வெகு சீக்கிரத்தில் நிறைவேற்ற தன்னலமற்று அன்னார் பாடுபடுவார் என்பதில் ஐயமில்லை.

மற்றும் மகாநாட்டைத் திறந்துவைக்க, நமது மாகாண நீதிபதி கனம். ஸ்ரீ N. சந்திரசேகரய்யர் அவர்கள் இசைந்துள்ளார்கள். நமது அகில இந்திய மஹாமண்டலத் தலைவர் ஸ்ரீ A. லக்ஷ்மீபதி அவர்களும் அச்சமயம் ஸம்மேளனத்திற்கு வர இசைந்துள்ளார்கள்.

தென்னிந்தியாவில் பிரஸித்தி பெற்ற ஆயுர்வேத வைத்தியர்கள் அச்சமயம் ஆராய்ச்சியுடன் சில விஷயங்களைப் பற்றி பேருரை நிகழ்த்துவார்கள். தமிழ்நாட்டில் பிரசஸ்தமான ஓஷதிகள், மருந்து சரக்குகள், மருந்துகளின் பொருட்காட்சி நடைபெறுகின்றது. உன்னதமான பொருட்காட்சி கொண்டுவந்தவற்கு தகுந்த தங்கமெடல் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கின்றது. இன்னமும் பல்வேறு விசேஷ நிகழ்ச்சிகள் அங்கத்தினர்கள், பிரதிநிதிகளுக்குத் தகுந்த மகிழ்ச்சியை அளிக்கக் கூடும். அனைவரும் வந்திருந்து மகாநாட்டை நன்கு நடத்த பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராம மந்திரம்,<br>ரெட்டி ராயர் குளம்,<br>கீழ்கரை, கும்பகோணம்.<br>23 — 3 — 48.

தங்கள்,<br>V. R. லக்ஷ்மீகாந்த சர்மா,<br>ஆயுர்வேத சிரோமணி,<br>வரவேற்புக் கமிட்டி கார்யதர்சி,<br>15-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம்.

---

குறிப்பு:— மகாநாட்டில் கலந்துகொள்ள பிரதிநிதி கட்டணம் ரூ. 5. பொருட்காக்ஷி கட்டணம் ரூ. 10. மற்ற விவரம் வரவேற்புக் கமிட்டிக் கார்யதரிசிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

# ஆமவாதம்

[E. ஸ்ரீநிவாஸன், ஆயுர்வேத பிஷக், சென்னை.]

ஆமவாதம் என்கிற இவ் வியாதி கடுமையான நோய்களுடன் சேர்க்கப்படாமற் போனாலும், விதிப்படி சிகித்ஸை செய்யாவிடில் யாப்யமான வியாதியாகவே ஆகிறது. சாதாரணமாக இவ்வியாதி ஆண் பெண் இருபாலர்களுக்கும் எவ் வயதிலும் தோன்றுகிற போதிலும் நடுத்தர வயதுள்ளவர்களே சாதாரணமாக பீடிக்கப்படுகிறார்கள். தவிரவும் இது சந்ததிப் பிறவியாகும். தேக ஆரோக்யம் தரும் எவ்வித ஆஹார விஹாரங்களுடனும் நியதியாக இருந்தால் தான் இந்நோயினின்று விடுதிபெற முடியும். சாதாரண நாட்களிலும் கூட ஆமத்தைப் பெருக்கும் எவ்வித திரவியங்களுடனும் சம்பந்தம் வைத்துக் கொள்வது பிசகு. நிதானங்களில் கூறப்பட்டபடி ஆமவாதம் என்னும் இவ்வியாதி சுகிகளுக்கே அனேகமாகத் தோன்றுகிறது. பொதுவாகக் கூறப்படின் சுகத்தை அனுபவிக்கும் பெரும்பாலோர் பணக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களின் ஆகாரமும் கூடுமானவரை ஆமோத்ரேகம் தரும்படியாக இருக்கலாம். தவிரவும் அவர்களுக்கு தேகாப்பியாசம் முதலிய ஜாடராக்னியை அதிகப்படுத்தும் வழிகளும் (மருந்துகளைத் தவிர) இல்லாமலேயே இருப்பதால் அவர்களுக்கு நேரிடும் இவ்வியாதி கடைசிவரை அவர்களிடமே குடி கொண்டு விடுகிறது. இந்தப் பகுதியில் சேர்ந்த பற்களிழந்த கிழவர் கிழவிகளுக்கு நேரிடில் மிக்க அவஸ்தைதான். "பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" என்கிற வசனப்படி ருசியான பண்டங்களைத் தின்னவும் ஆசை, ஆனால் விழுங்கி ஜீர்ணமாகாமல் நோயின் கொடுமை அதிகமாகுமென்ற கவலை. அனேக குடும்பங்களில் இது சந்ததிமுறையாக அனுபவிக்கப்படுவதையும் பார்க்கலாம்.

இனி இன் நோயின் நிதானம், ஸம்பிராப்தி, சிகித்ஸை முதலியவைகளைக் கூறுவோம்.

ஒன்றுக்கொன்று சேர்க்கையினால் விருத்தத் தன்மை அடையும் வஸ்துக்களைச் சாப்பிடுவது (பால்— அம்ல ரஸக்கனிகள் கலந்து உட்கொள்ளல், மத்ஸ்யம்— ஆனூப மாம்ஸம் இவைகளை ஸ்நிக்த பதார்த்தங்களுடன் கலந்து உண்ணல் முதலியவை) சாப்பிட்ட உடனேயோ, அல்லது பசியிருக்கும்போதோ வியாயாமம் செய்யல், ஸ்நிக்த போஜனமருந்தி தேகாப்பியாசம் செய்வது, சாப்பிட்ட ஆகாரம் ஜீரணமாகாமல் இருக்கும்போதே மறுபடி சாப்பிடல், நல்ல பசியிருக்கும்போது குறைத்து உண்ணல் அதிகம் தண்ணீர் அருந்தல், ஏற்ற காரணங்களில்லாமலே பகலில் படுத்துறங்கல், வேகங்களை அடக்குதல், வெறுக்கப்பட்ட பதார்த்தங்களைச் சாப்பிடல், வயிற்றில் பொருமல் தரும் ஆகாரங்களையும் அபக்வாகாரங்களையும் சாப்பிடல், பிசுபிசுவென்றிருக்கும் வஸ்துக்களை உபயோகித்தல், இத்யாதி காரணங்களால் ஜாடராக்நி மந்தமடைந்து அவ்விஷமாஹாரங்கள் க்ரமேண ஆமரூபமாக மாறி மேலே சொன்ன காரணங்களாலேயே பிரகோபமடைந்த வாயுவானது கிரஹித்து காலக் கிரமத்தில் ரஸாயன வஹ ஸ்ரோதஸ்ஸுகளை ஆச்ரயித்து அங்கு இடத்தைப் பெற்று விடுகின்றது இம் மனிதர்களின் தினசரி வேலைகளினாலும், ஆஹார விஹாராதிகளினாலும் அவ்வாம தோஷமானது வாயுவின் ஸம்யோகத்தினால் கைகள், பாதங்கள், சிரஸ், குதிகால், இடுப்பு, தொடை மற்றும் சந்திகளிலும் இடத்தைப் பெற்று அசைக்கவும் முடியாமல் வலியைக் கொடுக்கின்றது. ஆமம் என்று சொல்லப் படும் ஒரு நிலைமை சாதாரண மனிதர்களுக்கே தேக அஸௌக்யத்தைக் கொடுக்கும் ஒரு வித விஷம். தேகப் போஷாக்கைக் குறைத்துப் போடும் ஒரு முட்டுக்கட்டை. பல வியாதிகள் உண்டாவதற்கும் ஒரு அஸ்திவாரம். இந்த ஆம விஷமே பின்னும் ஆஹாரவிஹாரங்களினாலும், காலத்தின் மாறுதலாலும், பிரகிருதியினாலும், இதர இரண்டு தோஷங்களைப் பற்றியும் ஜ்வரம் முதலிய ரோகாதிகளைப் பரவச் செய்கிறது. ஆமம் சேர்ந்த வுடன் சாதாரணமாகத் தோன்றும்

குறிகள் :— தேக பாரம், அமைதியின்மை, வாயில் நீர் சுரத்தல், ஒரு வித இனிய ருசி, கண்களைச் சுற்றியும் கன்னங்களிலும் வீக்கம், சோம்பல் முதலியவை. குறிப்பாக ஆமவாதத்தின் லக்ஷணங்களோ வெனில்:— தேகமெங்கும் வலி, அருசி, பீனசம், தேகம் பாரமாயிருத்தல், தேகத்தில் ஏதோ ஒரு பிசு பிசுப்புத் தோன்றுதல், கொஞ்சம் சாப்பிட்ட போதிலும் ஜீர்ணமாகாமை. சோம்பல், ஒரு பக்கமாக சிறிது நேரம் கூட உட்கார முடியாமை, அப்படி கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தும் மறுபக்கம் திரும்ப சக்தி பெறுமை, அதிமூத்திரம், ஆமம் சேர்ந்த இடத்தில் வீக்கம், சந்திகளில் பிடிப்பு, அவ்விடங்களில் தொட்டாலும் அதிக வலி, ஹிருதயத்தில் ஒருவித உணர்ச்சி, அரோசகம், வாய் குழகுழப்பு, மனோத்ஸாகமின்மை முதலியவைகள் தோன்றும்

மேற்சொன்ன எல்லாம் உணரப் பட வேண்டுமென அவசியமில்லை. தவிரவும் வாதாதி தோஷங்களின் பிராதான்யத்தைக் கவனிக்கப்பட வேண்டும். வாத தோஷத்தின் ஸம்ஸர்க்கம் அதிகமிருந்தால், ஆமம் சேர்ந்த ஸ்ரோதோ மார்க்கங்களிலும், மற்ற இடங்களிலும் அதிக வலி உணரப்படும். வயிற்றுப் பொருமல், உதாவர்த்தம், முதலியவைகளும், பித்தப் பிராதான்யத்தில், ஜ்வரம், வீக்கங்களில் அழர்ச்சி, தாபம், சிவந்த தன்மை, வாந்தி, மூர்ச்சை முதலியவைகளும், கப்ப பிராதான்யத்தில் வீக்கத்தில் அதிக குருத்தன்மை, குறைவான வலி, எண்ணைப் பசை போலிருத்தல், அரோசகம், சோம்பல் முதலியவைகளும், ஸம்ஸர்க்க ஸந்நிபாத தோஷங்களில் அந்தந்த தோஷ லக்ஷணங்களின் கூட்டுதலும் அறியப்படும்.

**ஸாத்யாஸாத்ய நிலை** :— ஒரு தோஷத்தினலுண்டானதும், நடுவயதுடையவர்களும், எளிதில் சிகித்ஸைக்கு வசப்படுவர். இரண்டு தோஷக் கூட்டு யாப்யமாகவும், தேகமெங்கும் சோபம், முற்றும் ஜாடராக்னியிழந்தவர், வயது முதிர்ந்தவர் இவர்களுக்குத் தோன்றுவதும், ஸந்நிபாத ஸம்பந்தமானதும் கஷ்ட ஸாத்யமாகும்.

**சிகித்ஸா முறைகள் :**

இவ்வியாதியின் முக்கிய காரணம் ஆமப் பெருக்கினுல்தான் என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் தோஷத்தின் அளவு, பிணியாளியின் பலம், வயது, காலம் முதலியவைகளை அனுசரித்து லங்கனமே உத்தமம், கடுதிக்த ரஸங்களுடைய ஔஷதங்களும், லகுவான ஆகாரங்களுமே உபயோகிக்க வேண்டும். ஸ்னேக, ஸ்வேத, விரேசன முறைகளையும், தீபன, பாசன முடைய ஔஷதங்களும் இன்றியமையாதவை. தீக்ஷ்ண குணங்களுடைய ஔஷதங்களால் பக்குவம் செய்யப்பட்ட ஏரண்ட தைலம், குடலில் சேர்ந்திருக்கும் மலங்களை வெளிப்படுத்த உபயோகிக்க வேண்டும். இவ்வித ரேசனம் உபயோகிப்பதால், பழய மலங்களும், ஸ்ரோதோ மார்க்கங்களில் உள்ள தோஷங்களும் குதமார்கமாய் வெளியே தள்ளப்பட்டு அவ்விடங்கள் சுத்தமடைவதுடன் ஜாடராக்கினியும் தீபனமடைந்து வீக்கம், வலி, குருத்தன்மையும் ஸ்நிக்தத்வமும் ஓரளவு குறையும். தாகமிருப்பின் பஞ்சகோல பானீயம் அருந்த அருசி, வாய் வழவழப்பு, மந்தத்வம் முதலியவை நீங்கி நல்ல பசியுமுண்டாகும். தோஷங்களும் பக்குவம் அடையும். வ்யஞ்சனங்களில் சுனம், ஹிங்கு, ஜீரகம், தான்யகம், அஜமோதம், மரிசம் முதலியவைகளின் கூட்டினுல் ஜாடராக்னியைத் தூண்ட ஹேதுவாகும். லகு குண, உஷ்ண வீர்யமுடைய பதார்த்தங்களை உட்கொள்ள பலம் குறைந்த ஜாடராக்னியும் அவைகளை எளிதில் பசனம் செய்யும். பால், தயிர், வெல்லம், உளுந்தினுல் தயார் செய்யப்பட்ட பிஷ்டங்கள், ஆனூப மாம்ஸாதிகள், மற்றும் பொதுவாக குருகுணம், பிச்சிலம், அபிஷ்யந்தி இக்குணங்களுடையவைகளை முற்றும் வர்ஜிக்கவேண்டியது அவசியம்.

வாததோஷ மதிகரித்த ஆமவாதத்தில் கடுரஸம், உஷ்ணம், தீக்ஷ்ணம், லகு குண ஔஷதங்களால் பக்குவம் செய்யப்பட்ட கிருதங்களை பானம் செய்வித்த பிறகே ரேசனம் கொடுக்க ஸ்ரோதோ மார்க்கங்களில் உரைந்துபோன ஆமதோஷம் கல்லி வெளிப்படுவதுடன் அக்கிருதத்தில்

தீக்ஷ்ணோஷ்ண குண த்ரவ்யங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் சிறிதளவு ஆம தோஷமும் பக்குவம் அடையும். மேற்படி ரேசனத்தினால் தோஷங்கள் வெளிப்பட்டவுடன் வலி முதலியவை குறைவதுடன், மலபந்தமும் நீங்கி, ஜாடராக்னியும் உண்ணும் ஆகாரத்தைப் பசனம் செய்ய பலத்தைப் பெறுகிறது.

பித்தப் பிராதான்ய ஆமவாதத்தில் எளிய குணங்களுடைய சரக்குகளால் தயார் செய்யப்பட்ட ரேசன க்ருதம் முதலியவைகளே போதுமானது.

கபப் பிரகோபத்தில் லங்கனமும் பாசன ஔஷதங்களும் ஹிதமானது.

பொதுவாகக் கூறப்படில் இந்த ரோகத்தில் ஸ்ரோதோ மார்க்கங்களில் சேர்ந்திருக்கும் ஆம விஷத்தை வெளிப்படுத்துவதும், பசனம் செய்விப்பதும் தான் பிரதானம். பிறகு ஜாடராக்னியும் கிரமேண போதிய பலத்தைப் பெற்றுவிடும்.

தோஷங்கள் நிவர்த்தி செய்யப்படும் முயர்ச்சிகளை அப்யசித்துக் கொண்டிருக்கும் போதே ரஸ சம்பந்தமான ஔஷதங்களும் உட்கொள்ள வேண்டியது மிக்க அவசியம்.

கீழ் சொன்ன ரஸ ஔஷதங்களும், தைலம், க்ருதம், க்வாதம், லேபம் முதலியவைகளை அததன் பலாபலன்களை உத்தேசித்து உட்கொள்ள இந்நோயினின்றும் பூர்ண விடுதியைப் பெறமுடியும்.

ரஸௌஷதங்கள் :

1. आमवातारी रसः — (रसेन्द्रसारसंग्रहम्)
2. आमवातेश्वर रसः ,, ,,
3. वातराक्षसम् — (वैद्यचिन्तामणि)
4. वातविध्वंसिनी रसम् — (बसवराजीयम्)
5. लोहसौवीरम्

தைலங்கள் :

1. आमवातान्तकतैलम् — (सहस्रयोगम्)
2. विषमुष्टितैलम् — (बसवराजीयम्)
3. पिण्डतैलम् — (सहस्रयोगम्)

க்ருதங்கள் :

1. शृङ्गबेराद्यं घृतम् — (भावप्रकाशः)
2. काञ्जिकाद्यं घृतम् ,, ,,
3. शुण्ठीधान्यक घृतम् ,, ,,

கஷாயங்கள் :

रसोनादि कषायम् — भावप्रकाशः
रास्नापञ्च काथम् ,, ,,
रास्नासप्त काथम् ,, ,,

லேபங்கள் :

1. सुरदारु लेपम्
2. मर्मगुटिका

# அபினியும் அதன் உபயோகமும்.

**[கிருஷ்ணபிள்ளை குமாரசாமி]**

பருத்தித் துறையைச் சேர்ந்த தும்பளைவாசியாகிய கி. குமாரசாமி என்பவர் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத வைத்தியகலாசாலையில் D. A. M. வகுப்பில் வைத்தியக் கல்வி கற்கின்றார். இவர் பல நூல்களை ஆராய்ந்து எழுதிய அபினி விஷயமான இக்கட்டுரை வைத்தியமாணவர்களுக்கு மிகவும் பிரயோஜனப்படக் கூடியது. —ஆசிரியர்.

## முன்னுரை.

அபினி ஓர் விஷகுணச் சரக்கு. மருத்துவ முறையில் இதற்கு விசேஷ உபயோகமுண்டு. வேறு வழியிலும் அபினி உபயோகிப்பவர் பலருளர். அபினின் ஔஷத

குணங்களை சிலரும், விஷ குணங்களை பலரும் அடைந்து வருகிறார்கள். வைத்தியர்கள் இதன் குணங்களை அறிந்து கவனமாக நோயாளர்களுக்கு உபயோகிக்க வேண்டும். வைத்தியரல்லாதார் இதன் துர்க்குணங்களை அறிந்து அநாவசியமாயுபயோகிப்பதை கண்டிப்பாய் நிறுத்தவேண்டும்.

சுத்தி செய்யாமலும், அதிக அளவிலும், தேவையில்லாமலும் அபினியை யுட்கொண்டால் உயிருக்கே ஆபத்து உண்டாகும். இதனாலே தான் அரசினர் இதை கட்டுப்படுத்தியுள்ளனர். அரசாங்கத்தாரிடம் உத்தரவு பெற்றவர்களே இதை உபயோகிக்கலாம். உத்தரவில்லாதோர் இதை உபயோகித்தால் அபராதத்திற்கு ஆளாகிறார்கள்.

இதை தமிழில் அபின் என்றும், வடமொழியில் அஹிபேநம் என்றும், ஆங்கிலத்தில் (Opium) என்றும் வழங்குவர்.

## அபின் பயிரிடும் தேசங்கள்.

ஆதிகாலந்தொட்டு இந்தியாவே அபினியின் உற்பத்திக்குப் பெயர் போன தேசம். அபினியின் குணம் தேச வளப்பத்தை யொட்டி மாற்ற மடைகின்றது. இந்தியாவில் விசேஷமாய் பலவிடங்களில் விளையும் அபினைப் பார்க்கிலும், மால்வாவில் விளைவது சிறந்தது. துருக்கி தேசத்தில் விளைவதைத் தான் பெரும்பாலும் இங்கிலாந்தில் உபயோகிக்கிறார்கள். இந்தியாவில் பீகார் என்னும் தேசத்தில் உண்டாவதை 'பாட்னா அபின்' என்றும், ஐக்கிய மாகாணங்களில் உண்டாவதை "மாசி அபின்" என்றும், மத்திய மேல்மாகாணங்களில் உண்டாவதை 'மால்வா அபின்' என்றும் இராஜபுதனத்தில் உண்டாவதை 'மாளவ அபினி' என்றும் கூறப்படுகிறது. இன்னும் அஸாம் மாகாணம், நேபாளம், ஸமர்னா, எகிப்து என்னும் தேசங்களிலும் அபினி பயிராகின்றது. துருக்கி தேசத்து அபினில் 'மோர்ஃபியா' என்னும் சத்து அதிகமாயிருப்பதால் சிறந்ததாகக் கூறப்படுகின்றது. பாட்னா அபின் மிகச் சத்துள்ளது. நேபாளத்திலிருந்து இந்தியாவின் பெரும் பகுதியான இடங்கட்கும், வங்காளத்திலிருந்து பெரும்பாலும் சீனா தேசத்திற்கும் அபின் வியாபார முறையில் பரவுகின்றது.

## அபினி உண்டாகும் விதம்.

அபினி உற்பத்தியாகும் செடியை கசகசாச் செடி யென்றும், போஸ்தக்காய்ச் செடி யென்றும் அழைப்பர். இச் செடியின் காயிலிருந்து எடுக்கும் உறைந்த பால் அபின் எனப்படும். இச்செடியில் இரண்டு இன முண்டு. ஒன்று கறுப்பு நிற விதைகளையுடைய செடி, மற்றொன்று வெள்ளைநிற விதைகளை யுடைய செடி. காய் பழுக்காத தற்கு முன்பும், புஷ்ப இதழ்கள் உதிர்ந்து ஏழு நாட் சென்றபின்பும், அக்காயின் மேலோட்டில் இரண்டு மூன்று வட்டமான கீறுகளைக் கீற அதினின்றும் பால் வடிந்து உறையும். ஆழமாகக் கீறினால் பால்வடியாது. வெய்யிற் காலத்தில் கீறினால் கீறின வாயின்வழியாய் பால் வடிந்து கீழே சிந்திவிடும். ஆகையால் மாலைப்பொழுதிற் கீற இரவு முழுதும் பால் வடிந்து உறைந்திருக்கும். அதைக் காலையில் சுரண்டி எடுத்துக் கொள்ளலாம். மேற் படி காயை இவ்விதம் இரண்டு மூன்று தரம் கீறிப் பால் எடுக்கலாம். எடுத்த பின் உறைந்திருக்கும் பிசினே அபின் என்று சொல்லப்படும். இது காற்றினாலும், வெய்யிலினா லும், வரட்சி யடைந்து கெடாதபடி அதன் இலைகளால் மூடப்பட வேண்டும். புதுச்சரக்கு பிசுபிசுப்பாயும், ஊதா நிறமாயு மிருக்கும்.

## அபினின் சுத்திமுறை.

அபினைச் சுத்திசெய்தே பாவித்தல் வேண்டும். 1 ராத்தல் அபினியை ஒரு பாத்திரத்திலிட்டு இரண்டு பைன்ட் மழைஜலம் அல்லது வடி கட்டிய தெளிந்த நீர் விட்டு ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் நன்றாய்ப் பிசை ந்து கரைத்துக் கெட்டியான துணியில் வடிகட்டி ஒரு தனிப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு எஞ்சிய திப்பியில் மறுபடியும் இரண்டு பைன்ட் தண்ணீர் விட்டு முன் போல செய்து வடிகட்டி எடுத்து முன் பாத்திரத்தில் வைத்துக் கொண்டு மறுபடியும் எஞ்சிய திப்பியில் இரண்டு பைன்ட் தண்ணீர் விட்டுக் கரைத்து தெளிவெடுத்து திப்பியை நீக்கி அந்த ஆறு பைன்ட் தெளிவு நீரையும் ஒரு பாத்திரத்

தில் விட்டு மெழுகு பதம் வரும் வரைக்கும் காய்ச்சி எடுக்கவும்,

சுமார் 15 பலம் அபினிக்கு 15 ஆழாக்கு நீர். நீரை மூன்றுபங்கு செய்து ஒரு பங்கு நீராகிய ஐந்து ஆழாக்கு நீரில் அபினியை நன்ருய்க் கரைத்து ஒருநாள் முற்றும் (இருபத்திநாலு மணிநேரம்) ஊறியபின் வடிகட்டி திப்பியில் இரண்டாவது பங்கு நீரைக் கொட்டிக் கரைத்து முன்போலவே செய்து எஞ்சி நிற்கும் திப்பியை மூன்ருவது பங்கு நீரில் சேர்த்து முன்போலவே வடித்த நீர் யாவற்றையும் ஒன்ருகக் கூட்டி நீர் யந்திரத்தில் காய்ச்சி மெழுகு பதத்தில் எடுத்து கல்கார்க்குப் புட்டியில் சேர்த்து வைக்க வேண்டும்.

அபினியில் உபயோகிக்கப்படும் பாகங்களாவன: காயின்: பால், தோல், வித்து என்பவைகளே.

அபினியானது கைப்புச் சுவையையும், கார்ப்பு விபாகத்தை யுடையது.

## அபினியின் செய்கை.

1. வேதனு சாந்தினி.
2. அங்காகர்ஷண நாசினி.
3. உக்ரரோக சமனகாரி.
4. ஸ்வேதகாரி.
5. மூத்ர வர்த்தனி.
6. கபஹர காரி.
7. ரக்த ஸ்தம்பனகாரி.
8. நித்திராகாரி.
9. உறக்க்மெழுப்பி.
10. சமனகாரி.
11. உஷ்ணகாரி
12. காமவர்த்தினி.
13. ஸங்கோசணகாரி.
14. வீர்ய வர்த்தினி.

என்னும் செய்கைகளையுடையது.

## அபினின் குணங்கள்.

அபினில் அநேக கூட்டுப் பதார்த்தங்களுண்டு. ஆனுல் மூன்று முக்கிய சத்துக்கள் உண்டு. அவையாவன - மோர்வயின், கோடீன், நாக்கொற்றின் என்பன.

"நல்ல அபினிக்குணத்தை நாடறியும் நாம்புகல்வ
தல்ல குன்மம் வாதம் அருஞ்செவிநோய்—பல்லின் வலி
பேதிமந்தம் அத்திநோய் பீநசம்போம் வன்மையுண்
சாதி யுதிரச்சுத்திதான்."
[டாம்

—" போற்றிடுமவின் குணங்கேள் புகல்பேதிவாயுப்
போக்கும்
ஊற்றமாம் பித்தம் சேர்க்குமுறு தாது வளரச்
செய்யும்.

அபினியினுல் குன்மம், வாதப் பிணிகள், காதுநோய், பல்வலி, பேதி (அதிஸாரம்) மந்தம், எலும்பைப்பற்றிய நோய்கள், நாசிரோகங்கள், ஆகிய இவைகள் போம். சாதிலிங்க நிறமுள்ள இரத்த சுத்தியும், உடலுக்கு வன்மையும் உண்டாகும்.

அபினியானது நாடியைத் தீவிரமாய்ச் செல்லச் செய்யும். மூளைக்கு ஒருவித உற்சாகத்தைக் கொடுக்கும். சர்மத்தில் உஷ்ணத்தை அதிகப்படுத்தும், அடிக்கடி வாய்க்குமட்டலுடன் நித்திரையை யுண்டாக்கும். குடலைச் சுருங்கச் செய்யும்.

இன்னும் அபினியால் சுவாஸம், மார்புச்சளி, சுரத்தில் காணும் வெப்பம், சீதசுரம், பித்தசுரம், அம்மையிற் காணும் கொப்பளம், அசீரணபேதி, அதிஸார பேதி, சீதபேதி, வாந்திபேதி அக்னிமாந்தம், வாந்தி, சூதக வயிற்றுவலி, உதரசூலை, இரத்தப் பெருக்கு, பெரும்பாடு, பாண்டு, அதிமூத்திரம், மதுமேகம், கண்நோய், அண்டவாதம், கீல்வாதம், இடுப்புவலி, கால்குடைச்சல், சந்நிபாத ரோகங்களில் காணும் வலி, விரணம், இருதயத் தளர்ச்சி, நித்திரைக் கெடுதி, அபஸ்மாரம், உன்மாதம், மனக்கலக்கம் சித்தவிப்ரமை, கக்கிருமல், வீக்கம், என்னும் நோய்களும் தீரும். பிரஸவ வேதனையில் திரும்பின பிண்டத்தை வேதனையில்லாமல் வெளிப்படுத்தும்.

### அபினி பாவிக்கும் முறை.

சுத்தி செய்த அபினியை கால் முதல் ஒரு குன்றியளவு உபயோகிக்கலாம். ஆனல் சிற்சில கொடூரமான நோய்களில் இந்த அளவையும் மீறிக் கொடுக்க நேரிடும். மாத்திரை அதிகப்பட்டால் அநேக துன்பங்களுக்கு உட்படுத்துமாகையால் அதிக ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும். குழந்தைகளுக்கோ ஐந்து வயதுவரைக்கும் இதை

உபயோகிக்கலாகாது. வயது முதிர்ந்தவர்களுக்கும் ஜாக்கிரதையுடன் உபயோகிக்கவேண்டும். அவர்களுக்கு மாத்திரை அதிகப்பட்டால் சுவாசத்தை அனுசரித்து குறட்டையை யுண்டாக்கும். முகத்தை இறுகப் பண்ணும். அன்றியும் மந்தபுத்தி, நாடி, நடை மெதுவாதல், மூச்சுவாங்கல், கண்தாரை சுருங்கல் ஆகிய குறிகள் காணப்படும்.

### கவனிப்பு.

இதை உபயோகிக்குமுன் இதிலுள்ள மலினங்களைப் போக்கி உபயோகப்படுத்த வேண்டும். அபினி சம்பந்தமான மருந்துகளைச் செய்யும்போது மாசிக்காயை ஒத்த துவர்ப்பான சரக்குகளையும், சுண்ணும்புச் சலம், பால்துத்தம், மயில்துத்தம், அன்னபேதி, சவ்வீரம், முதலியவற்றைக் கூட்டினுல் அபினியினுடைய வீறு சிறிது குறைந்து விடும். ஒருக்கால் அபினி விஷம் அதிகமாய்ப் போய்விட்டால் உடனே மாசிக்காய், அல்லது நெல்லிவற்றல், முதலிய துவர்ப்புள்ள சரக்குகளை கியாழமிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அபினி வீறு தணியும் வரையில் கொடுக்க நற்குணத்தை யுண்டாக்கும்.

அபினின் சத்துருப் பதார்த்தங்களான கார உப்புகள், சுண்ணம்புத் தெளிவு நீர், துவர்ப்பு வஸ்துக்கள், செம்பு, துத்தநாகம், பாதரஸம் இவையாம். (தொடரும்)

# சிரரோகத்தின் விளக்கம்.

*[இலங்கா ஆயுர்வேத சித்தவைத்தியக் கல்லூரி ஆசிரியர் வைத்திய கலாநிதி திரு வி. கனகசபை அவர்கள் எழுதியது.]*

*(சென்றமாதத் தொடர்ச்சி)*

### 2-வது கபால பித்த குணம்.

**காரணம்:**—மூளையில் பித்தம் அதிகரித்து உண்டாவது.

இதன் குணங்களாவன:

சிரத்தில் வறட்சி யுண்டாதல், கண் புகைதல், உணவு குறைதல், மூக்கு, புருவம் இவைகளில் குத்துவலி முதலிய

வேதனை யுண்டாதல், நாக்கசத்தல், கண், முகம், கால், கை இவைகளில் எரிவு, மலசலம் சிவந்திருத்தல், அல்லது மஞ்ச ளித்தல், தேக நடுக்கம், தலைவலி, மயிர்க்கூச்செறிதல், உடம் பில் இரத்தங் கெட்டு வெளுத்துப் போதல், தலைசுற்றுதல், கை காலசதி, எழுந்திருந்தால் விழுத்திவிடுதல், செவி குளிர் ந்து போதல், சத்தியெடுத்தல், வாயில் நீரூறல், பொருந்துத் தோறுமுளைதல், வயிற்றிலழற்சி, காதிரைதல், கண்களில் நின்று அனற் பொறி போலப் பறத்தல், சிலவேளை மயக்க முண்டாதல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

**சிகிச்சை :**

1. **குமரி தைலம் :—** கற்றாழை நீர் படி 4. நல்லெண்ணை, பசும்பால் வகை படி 1. இவைகளை ஒரு பாண்டத்தில் சேர்த்துக்கொண்டு, மஞ்சிட்டி, பூலாங்கிழங்கு, அடவிகச் சோலம், ஏலரிசி, இலவங்கப்பட்டை, பச்சிலை, பச்சைக்கற் பூரம், அகில்கட்டை, சந்தனம், குங்குமப்பூ, அஞ்சனக் கல், கடுகு ரோகணி, இலமிச்சம்வேர். இருவேலி, பெருஞ்சீரகம், சிறுநாகப்பூ, அதிமதுரம், செங்கழுநீர்க் கிழங்கு. தாமரை வளையம், சாதிக்காய், தக்கோலம், கண்டில் வெண்ணெய், கோரைக் கிழங்கு, பால்ச்சாம் பிருணி இவைகள் வகைக்கு கழஞ்சு 1.

இவைகளில் குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் நீங்கலாக, மற்றவைகளைப் பொடி செய்து பாலிலரைத்து முன் கூறிய கஷாயம் எண்ணை இவற்றிற் கரைத்து 4 நாள் சிறு கொதியிட்டு, 5-ம் நாள் மெழுகு பதத்தில் வடித்து, பச்சை கற்பூரம், குங்குமப்பூ இரண்டையும் பொடி செய்து சூட் டுடன் எண்ணெயிற் கலந்து காற்றுப் படாமற் குப்பியில் அடைத்துக் கொள்ளவும்.

இத்தயிலத்தை வாரத்திற் கிரண்டு தினம் தலைக்குத் தேய்த்து இளவென்னீரில் முழுகிவர கபால பித்த வாயு, நேத்திர நோய்கள், உடம்பு கை காலெரிதல், பீனிசம் முத லிய பித்த சம்பந்தமான வியாதிகள் குணமாகும்.

2. **குமரித்தைலம் :—** கற்றாழைநீர், பசும்பால், எள்ளெண் ணெய் வகை படி 4. இவைகளை ஒரு பாண்டத்திற் கலந்து

கொண்டு, தாமரைவளயம், செங்கழுநீர்க் கிழங்கு, கொட்டிக்கிழங்கு, கோரைக் கிழங்கு, இலாமிச்சம் வேர், இலுப்பைப் பூ, இருவேலி, புன்னைப் பூ, சந்தனம், ஏலரிசி, இலவங்கப்பட்டை, காரகில் கட்டை, பச்சிலை, சிறுநாகப்பூ, அதிமதுரம், கிரந்திதகரம், வெண்கோட்டம், குங்கிலியம், நாகணம், சடாமாஞ்சில், மஞ்சள், வெளுத்தற் பிசின், நறும் பிசின், (சாம்பிராணி) இவைகள் வகை கழஞ்சு 4.

இவைகளை இடித்துப் பொடி செய்து முற்கூறிய திரவங்களில் ஒன்றினுல் நன்ருயரைத்துக் கஷாயத்திற் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து வாரமிருமுறை காலையில் தலைக்குத் தேய்த்து உடம்பிலும் பூசி, சிகைக்காய் அரப்பிட்டு இளவெந்நீரில் முழ்கிவரக் கபால பித்தம் முதலிய பித்த சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

**3. ஆமலகத் தைலம் :**— நெல்லி வற்றல், இலாமிச்சம் வேர், கோரைக் கிழங்கு, சீந்திற்றண்டு இவை வகைக்கு பலம் 20. இவைகளை இடித்து 32 படி தண்ணீர் விட்டு அவித்து நான்கு படியாகக் குறுகிய பின் வடித்துத் தைல பாண்டத்தில் சேர்த்துக் கொள்ளவும். அத்துடன் செவ்விளநீர், நல்லெண்ணெய், பசும்பால் வகை படி 1 கலந்து வைத்துக்கொள்ளவும்.

பின்பு தாமரைக் கிழங்கு, தாமரைப் பூவினிதழ், தாமரை அல்லி, தாமரைவித்து, செங்கழுநீர்க் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, புன்னைப்பூ, இலாமிச்சம் வேர், நன்னரி வேர், சந்தனம், அகில், ஏலம், இலவங்கம், கோட்டம், அதிமதுரம், செஞ்சந்தனம், இலந்தைப் பிசின், பனம் பிசின், சாதிக்காய், தக்கோலம், கண்டில் வெண்ணெய், முந்திரிகைக்கனி, பச்சிலை, கோரைக் கிழங்கு, நாகணம், கடல் நுரை, புனுகுச் சட்டம் இவை வகைக்கு கழஞ்சு 2.

இவைகளில் புனுகுச்சட்டம் நீங்கலாக மற்றச் சரக்குகளை இடித்துப் பொடிசெய்து இஞ்சிச் சாற்றில் நான்கு சாமம் அரைத்து முன் கஷாயத்திற் கரைத்து பதத்தில் வடிக்கும் போது, (காச்சி) முற்கூறியபடி வடிக்கும் பாண்டத்தில் புனுகுச் சட்டத்தை மெல்லிய துண்டுகளாக அரிந்து போட்டு வடித்து வாரம் இருமுறை முழுகிவரின்

பித்தகபாலம், வறட்சி, கண்ணெரிவு முதலிய பித்த நோய்கள் குணமாகும்.

**4. கற்ருழைவேர்த் தைலம்** :- கற்ருழை வேர் பலம் 100. நறுக்கியிடித்து 16 படி நீரிலிட்டு நாலிலொன்ருகக் குறுகக்காச்சி வடித்துத் தைல பாண்டத்திற் சேர்த்துக் கொள்ளவும். தென்னங் குரும்பை இடித்துப் பிழிந்த சாறு படி 1. இளநீர் படி 1. கற்ருழைச்சாறு படி 2. நல்லெண்ணை, பசும்பால் வகை படி 4.

இவைகளையும் முன் கஷாயத்துடன் கலந்து கொண்டு பின்பு சந்தனம், அகில், கோட்டம், ஏலம் செஞ்சந்தனம் இலவங்கப்பட்டை, மதுரம், பச்சிலை, சாதிக்காய், தக்கோலம், முந்திரிகைப்பழம், கண்டில்வெண்ணை, கோரைக்கிழங்கு, குங்கிலியம், சிறுநாகப்பூ, கடல் நுரை, புன்னைப்பூ, செங்கழுநீர்க் கிழங்கு, தாமரைக் கிழங்கு, தாமரைப்பூவிதழ், தாமரையல்லி, தாமரைவித்து, இலமிச்சு, சிருவேலி நன்னாரிவேர், சடாமாஞ்சில், கொட்டிக் கிழங்கு, புனுகுச் சட்டம் இவைகள் வகை கழஞ்சு 4.

புனுகுச் சட்டம் நீங்கலாக மற்றவற்றை இடித்து இளநீரிலரைத்து தைல பாண்டத்திற் கரைத்து, சிறுகொதியிட்டு, நான்காநாள் பதத்தில் வடிக்கும்போது வடிகலசத்தில் புனுகுச்சட்டத்தை முன்முறைகளிற் கூறியபடி போட்டு வடித்துக் கொள்ளவும் முன்போல் வாரமிரு முறை முழுகிவர முற்கூறிய நோய்கள் குணமாகும்,

**5. சஞ்சீவித் தைலம்** :- சீந்தில்க்கொடி, நெல்லிவற்றல் வகைக்குப் பலம் 10. இலாமிச்சம் வேர், இருவேலி, கோரைக்கிழங்கு, சிற்ருமட்டி வேர், மகிழம்பூ, சந்தனம், ஏலம், வகைக்குப் பலம் 8. இவைகளை நறுக்கி, இடித்து 16 படி நீரிலவித்து 4 படியாக வடித்துக் கொள்ளவும் சாத்தாவாரிற் சாறு, இளநீர், கருப்பஞ் சாறு கொவ்வை யிலைச் சாறு, கையாந்தகரைச்சாறு, நரிப் பயற்றிலைச் சாறு இவைகள் வகைக்கு படி 1. பசும்பால், நல்லெண்ணை வகை படி 4. இவைகளைப் பாண்டத்திற் சேர்த்துக் கொதிக்கும் போது, இலாமிச்சம் வேர், இருவேலி, நன்னாரி

வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, கோரைக்கிழங்கு, தாமரை வளயம், செங்கழுநீர்க் கிழங்கு, செங்கழுநீர்ப்பூ, சந்தனம், அகிற்கட்டை, ஏலம், இலவங்கப்பட்டை, செண்பகப்பூ, பச்சைக்கற்பூரம், புனுகுச் சட்டம், பச்சிலை, நாகப்பூ கச்சோலம், அடவிக்கச்சோலம், தக்கோலம், சாதிக்காய், கோட்டம், அதிமதுரம், குங்குலியம், தருப்பைவேர், பெருஞ்சீரகம், சடாமாஞ்சில், கிரந்திதகரம், முந்திரிகைப்பழம், சந்தணம், தேவதாரம், சதகுப்பை, சாம்பிருணி, கண்டில் வெண்ணெ, அஞ்சனக்கல்லு, இந்துப்பு, கடுகுரோகணி, திப்பலி, குங்குமப்பூ, இருப்பைப்பூ, இவைகள் வகைக்கு கழஞ்சு 2.

**செய்முறை :**

குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், புனுகுச்சட்டம் நீங்கலாக மற்றச் சரக்குகளை இடித்து முற்கூறிய திரவங்களில் ஒன்றினுல் நன்கு அரைத்து தைலத்தோடு கலந்து, அடிப்பற்ருது சிறு கொதியிட்டு, மெழுகுபதத்தில் பாண்டத்தை அடுப்பினின்று இறக்கி குங்குமப்பூ, பச்சைக்கற்பூரமாகிய இரண்டையும் பொடிசெய்தும், புனுகுச்சட்டத்தை மெல்லிய துண்டுகளாய் நறுக்கியும், வடிகலயத்திலிட்டு சூட்டுடன் வடித்துத் தைலத்தைப் பதனஞ் செய்யவும்.

இத்தைலத்தை வாரமிருமுறை தலையில் தேய்த்து சிகைக்காயரப்பிட்டு இளவென்னீரில் முழுகிவரத் தீரும் நோய்கள்: பித்தம்— 40-ம் முக்குநீர் பாய்சல், கபாலக் குத்து, நேத்திர நோய்கள், பல்லீறு கரைதல், முதலிய தந்த நோய்களும், செவி நோய்களும் தீரும். புளி, புகையிலை, பகல் நித்திரை, புணர்ச்சி முதலிய அபத்தியங்களை நீக்கவும். இத்தைலம் எமது குருபரம்பரையில் செய்து கைகண்ட நல்ல முறையாகும்.

(தொடரும்)

# அங்கத்தினர்களுக்கு முக்கிய அறிவிப்பு

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்திற்கு சந்தா ஸம்பந்தமான வருஷம் ஜனவரி முதல் டிஸம்பர் முடிய (Calender Year) கணக்கு வைக்கப்படுகிறது.

அங்கத்தினர்களுக்கு வருஷச் சந்தா ரூ. 3—0—0

வைத்திய சந்திரிகை எனப்படும் மண்டலத்தின் மாதப் பத்திரிகை அங்கத்தினர்களுக்கு தனிக்கட்டணமின்றி வழங்கப்படும்.

சந்திரிகையை V. P. P. மூலம் அநுப்பி சந்தாவை வசூலிப்பதில் அங்கத்தினர்களுக்கு நான்கு அணு அதிகச் செலவாகுமாதலால் இன்னும் சந்தா அநுப்பாத அங்கத்தினர்கள் உடனே தங்கள் சந்தாவை அவசியம் அனுப்பிவிடும்படி கோருகின்றோம்.

1947-ம் வருஷத்திய சந்தாவையும் இன்னமும் செலுத்தாதிருக்கும் சில அன்பர்கள் இரண்டு வருஷ சந்தாவையும் அநுப்புமாறு பிரார்த்திக்கப்படுகின்றனர்.

சந்தா அநுப்பவேண்டிய விலாஸம்:—

ஸ்ரீ A ராகவராவ், A. L. I. M.
உபகார்யதர்சீ, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினுப்பள்ளி.

விளம்பர விகித விஷயங்கள், அங்கத்தினர்களின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந் தேதிக்குள் பத்திரிகை கிடைக்காவிடில் தெரிவிக்கப்படவேண்டியது, மற்றும் பத்திரிகை நிர்வாஹ ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் மேற்படி விலாஸத்திற்கே எழுதிக்கொள்ளவேண்டும்.

---

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ, ஆயுர்வேதாசார்ய,

ஆசிரியர்: வைத்திய சந்திரிகா,

ஆத்ரேயாசிரமம், தென்னூர்ரோடு, திருச்சினுப்பள்ளி.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுதவேண்டும்.

குறிப்பு:— சந்திரிகையில் பிரசுரமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் பதபேதங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல. பிரசுரத்திற்கு அநுப்பவேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்த்ரியம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பிப் பெறவேண்டுமாகில் தபால் கட்டணம் கட்டுரையாளரால் அனுப்பப்படவேண்டும்.

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

**P. S. ராமசர்மா அவர்களின்**

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டு பிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலைமையிலும்

போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்,

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர், S. I. Ry.


Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Sri Vilasam Press, Srirangam.